Journal of Tamil Studies, eISSN 2716-5507,
Volume 1, No.1, 2020, (107-118).

குறள் நெறி போற்றும் பொருள் நெறி

The Concept of Material Culture highlighted in Thirukkural

Krishnamoorthy Karunakaran[1]

krishnamoorthykarunakaran32@gmail.com

ஆய்வுச்சாரம்: திருக்குறள் பொருளதிகாரத்தில் இடம்பெற்றுள்ள சில முக்கியமான பொருள் நிலைப் பண்பாட்டுக் கோட்பாடுகளின் சிறப்புத்தன்மையை வெளிக்கொணர்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் முதன்மை நோக்கமாகும். இவ்வதிகாரத்தில் காணப்படும் 700 குறட்பாக்கள் பல்வேறு சமுதாய – பண்பாட்டு – பொருளாதார – கல்வி மற்றும் அரசியல் சார் வாழ்வியல் நிலைக்களங்களின் வாயிலாக குடிமக்களும் அரசும் செங்கோன்மையைக் கையாண்டு, நாட்டையும் மக்களையும் பொறுப்போடு பாதுகாத்தல் வேண்டும் என்பதைத் தெளிவுற எடுத்துக்காட்டுகின்றன. இவ்வதிகாரத்தில் இடம்பெற்றுள்ள அரசியல், அங்கவியல், ஒழிபியல் என்ற மூன்று உட்பிரிவுகள் மேற்குறிப்பிட்ட பல்வேறு நிலைகளைத் தெளிவுபடுத்துகின்றன. மேலும், சமுதாயத்தின் வளமான வாழ்க்கைக்குப் பெரிதும் தேவைப்படும் நிலைகளையே இந்த 700 குறட்பாக்கள் விளக்குவதோடு தமிழ்ச்சமுதாயத்தில் அன்றைய நிலையில் அமைந்திருந்த யதார்த்த வாழ்வியல் முறையையே சுட்டிக்காட்டுகின்றன. இந்த யதார்த்த உண்மை நிலை விளக்கம் உலக சமுதாயத்தின் பொருள்சார் வாழ்வியலை விளக்குவதற்கு இன்றைய நிலையிலும் ஏற்புடையதாக அமைந்துள்ளது கண்கூடு.

கருச்சொற்கள்: பொருள் நிலைப் பண்பாடு, நாடு – வீடு – மேலாண்மை – அரசு, பொருள் செயல் வகை, இயற்றல் – ஈட்டல் – காத்தல் – காத்த வகுத்தல், அரச மேலாண்மை

Abstract: *The main objective of this research paper is to bring out the significance of some of the important concepts of material culture as reflected in poruLathikaaram of the renowned literature known as ThirukkuraL in Tamil. The 700 couplets found in this section discuss a number of aspects of the social – cultural – economic – educational - political life of the community and role of the citizens and rulers in the country in performing their duties to safe guard the nation and people by providing cenkooNmai. There are three sub-divisions in this section, which deal with three important areas viz., politics, its major divisions and the related ones. The couplets discuss only those aspects that are quite relevant for the well-being of the society what we find through the 700 couplets reflect the realism that prevailed in the Tamil society, which very well applies to the world community even today.*

Keywords: *Material culture - Country, Home – Management – Governance, Economic Management, Creation – Earning – Protection – Distribution - Political Management*

அறிமுகம் : நாடு - வீடு - மேலாண்மை - அரசு

தொடக்க காலம் முதல் மக்கள் தம் வாழ்க்கைக்கு உணவு - உடை - உறையுள் மூன்றுமே அடிப்படைத் தேவைகளாக இருந்து வருவதையும் இவற்றைப் பெறுவதில் மக்களது உழைப்பும் செயற்பாடும் பல்துறைப் பணிகளில் அவர்களது செயற்பாடும் செம்மையாக அமைய வேண்டியது

அவசியமானது என்பதையும் காணமுடிகிறது. என்றாலும் அடிப்படைத் தேவைகளைப் பெறுவதில் கூட இன்று சிக்கல்கள் எழுந்து வருகின்றன. அதே நேரத்தில் இம்மூன்றோடும் தொடர்புடைய தொழில், கல்வி, பொருளாதாரம், வணிகம், தகவல் தொடர்பு போன்ற பிற துறைகளின் தேவையும் வளர்ச்சியும் பங்கும் நாளும் பெருகி வருவது கண்கூடு. இன்றைய நிலையிலும் வீடில்லாத, பசியாறத் தேவையான உணவில்லாத, மாற்றுத் துணியில்லாத மக்களது வாழ்க்கையையும் ஒரு புறம் பார்க்க முடிகிறது. அடிமைத்தனம், சர்வாதிகாரம் போன்றவை பெருமளவில் ஒழிக்கப்பட்டு ஆங்காங்கே உலக நாடுகள் விடுதலை பெற்றவையாக - குடியரசு கொண்டவையாக இயங்கி வருகின்றன. இருபத்து ஒன்றாம் நூற்றாண்டில் அடியெடுத்து வைத்துள்ளதோடு அதன் இருபதாம் ஆண்டில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

மக்கள் தாங்கள் வாழும் நாடுகளில் பல்வேறு திட்டங்கள் - செயற்பாடுகள் வாயிலாகப் பயன் பெற்று வாழத் தொடங்கியுள்ளனர் என்றாலும் இதில் எந்த அளவிற்கு மனித சமுதாயம் பயனடைந்துள்ளது என்பது ஆழ்ந்து எண்ணிப் பார்க்கப்பட வேண்டிய நிலையில் உள்ளது. வறுமைக்கோட்டிற்குக் கீழ் - பொருளாதாரத்தில் (மிகவும்) பின்தங்கிய நிலையில்- வேலையில்லாத திண்டாட்டத்தில் - தெருவிலும் பொது இடங்களிலும் கிடைத்ததை உண்டு, உறங்கிய நிலையில், உடுத்திக் கொள்ள ஓரளவிற்கேனும் சரியான உடுப்புகள் ஏதும் இல்லாமல் அன்றாடம் முப்பதுக்கு மேற்பட்டு விழுக்காட்டினர் வாழ்ந்து வருகிறார்கள் என்பது நம் கவனத்தைப் பெரிதும் ஈர்ப்பதோடு இவற்றையெல்லாம் போக்குவதற்கு நாடும் அரசும் எப்படியெல்லாம் திட்டமிட்டுச் செயல்பட வேண்டும் என்பதை எண்ணிப் பார்க்க தூண்டுகிறது - கவலை கொள்ளச் செய்கிறது. (கருணாகரன், 2014)

குறள் நெறிகள் : உயர்வுள்ளலும் அதனடிப்படையிலான செயற்பாடும்

குறளாரின் கூற்றுப்படி உயர்வுள்ளலாக அமைந்து அதன் வழியில் செயற்பாடு மேற்கொள்ளப்படுவதன் இன்றியமையாமையை இச்சூழலில் நன்கு அறிந்துகொள்ள முடிகிறது. நாடும் வீடும் மனிதனின் அடையாளங்கள். இந்த அடையாளங்கள் ஆட்டம் காணலாமா? ஆடிப்போகலாமா?

நாடும் வீடும் நமது அடையாளங்கள்; அடிப்படைத் தேவைகள், அன்றாடப் பயன்பாட்டுத் தலங்கள். எனவே, இவை பேணப்பட வேண்டியவை; முறையாகப் பராமரிக்கப்பட வேண்டியவை. அதனால்தான் அன்று தொடங்கி இன்று வரை நாடும் வீடும் ஆளப்படுகிறது; ஆட்சிக்கு உட்படுத்தப்படுகிறது; மன்னராட்சி - மக்களாட்சி - மனையாட்சி என்றழைக்கப்படுகிறது. இவற்றின் மூலம் மேலாண்மைக்கும் ஆளாகிறது.

திருக்குறள் ஓர் சமூக அற நூல் - அற இலக்கியம். இதில் எழுநூறு (700) குறட்பாக்கள் பொருளதிகாரத்தில் இடம் பெற்றுள்ளவை. இன்றைய பொருள் நிலைப்பண்பாடு (Material Culture)

மிகத்தெளிவாக - நிறைவாக - ஆற்றல் மிக்க வகையில் இவ்வதிகாரத்தில் இடம்பெற்றிருப்பது உற்று நோக்கத்தக்கது, உயர் சிந்தனைக்குரியது. *(Chendrayan, 2010)*

ஆய்வு முன்னோடிகள்

திருக்குறளில் பொருள் நிலைப் பண்பாடு *(Material Culture)* குறித்த ஆய்வுகள் நேரடியாகp பொருள் நிலைப் பண்பாடு குறித்த ஆய்வு அணுகுமுறைகளைப் பயன்படுத்தி இதுவரை விரிவாகவோ, ஆழ்நிலையிலோ மேற்கொள்ளப்படவில்லை. எனினும், இத்தகைய அணுகுமுறையின் பயன்பாட்டிற்கு முன்னோடி ஆய்வுகளாகச் சிலவற்றைக் கருத முடியும். இவற்றில் ஒன்பது ஆய்வுகள் குறிப்பிடத்தக்கவை. இவ்வாய்வுகளை இப்பிரிவின் கீழ் முன்னோடி ஆய்வுகளாகக் கருத அவற்றின் நோக்கங்களும் பயன்படுத்தப்பட்டுள்ள தரவுகளும் காரணமாகின்றன. 1993-இல் தொடங்கிய இத்தகைய ஆய்வுகள் 2018-வரை பல்வேறு நிலைகளில் – தலைப்புகளில் வெளியிடப்பட்டுள்ளன.

1993 – 1994 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டு நூலாக வெளியிடப்பட்ட ஆய்வு குறள் மொழியும் நெறியும் என்பது (கருணாகரன் & ஜெயா, 1994). மொழிப் பயன்பாட்டிற்கு அதன் வழியாகs சமுதாயத்தின் வாழ்வியலை உற்றுநோக்குவதற்கு வழிவகுப்பதாக அமைவது குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து முனியப்பன் (2001) மேற்கொண்ட ஆய்வு நேரடியாகத் திருக்குறளின் வழி வெளிப்படும் வணிகவியல் நன்னெறி முறைகளை மேலாண்மைக் கோட்பாடுகளின் அடிப்படையில் ஆய்வுக்குள்ளாக்கியுள்ளது சிறப்புக்குரியது.

சென்றாயன் (2010) மேற்கொண்ட *‘The First Laws in Economics and Indian Economic Thought - Thirukkural’* என்ற ஆய்வு திருக்குறளைப் பொருள்சார் கோட்பாட்டு விளக்கத்தின் அடிப்படையில் அணுகிய குறிப்பிடத்தக்க ஆய்வாகும். பொருளதிகாரம் குறிப்பிடும் முக்கியமான பொருள்சார் கொள்கைகளைப் பயன்படுத்திச் சில விளக்கங்களை இவ்வாய்வு முன் வைத்துள்ளது.

Ancient yet Modern Management Concepts in Thirukkural (Irai Anbu, 2012) எனும் நூலில் முன் வைக்கப்படும் மேலாண்மைக் கோட்பாடுகள் இன்றும் பல்வேறு நிலைகளில் முன்னிலைப்படுத்தப்பட்டு வருவதைக் குறிப்பிடுகிறது.

Krishnakumar (2014) என்பவர் அவருடைய *‘Management Concepts from Thirukkural’* என்ற ஆய்வில், பொருளாதிகாரம் வரையறை செய்து வழங்கியுள்ள மேலாண்மைக் கோட்பாடுகளை முறையாக வகைப்படுத்தி, தெளிவான விளக்கத்தைக் கொடுத்துள்ளார்.

'திருக்குறள் – ஒரு கோட்பாட்டுச் சங்கமம்' என்ற கட்டுரையில் கருணாகரன் (2014) பொருளாதிகாரம் வெளிப்படுத்தும் நாடு – சமுதாயம் – பொருளாதாரம் – வாழ்வியல் – வளர்ச்சி போன்ற பலதுறை சார் கோட்பாடுகளை ஒருங்கிணைத்து விளக்க முற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. 700 குறட்பாக்களின் வழி வெளிப்படும் பொருள்சார் – பொருள் நிலைப் பண்பாடுசார் கொள்கைகள் இதில் விளக்கப்பட்டுள்ளன.

'Rediscovering Six Factor Entrepreneurial Decision Making Model in Thirukkural' என்ற ஆய்வுக்கட்டுரை *(Jain, Alka 2012)* பொருள் சார் வணிகம் மற்றும் தொழில் துறைகளில் மேற்கொள்ளப்படும் உறுதிப்பாட்டு முன்மாதிரிகளை வரையறை செய்ய முற்பட்டுள்ளது வரவேற்பிற்குரியது.

இதனைத் தொடர்ந்து *'Thiruvalluvar and the Art of Management'* என்ற ஆய்வுக்கட்டுரையில் நாகநாதன் (2015) திருக்குறள் குறிப்பிட்டுள்ள மேலாண்மைக் கலையினைத் *(Management Art)* தெளிவாகவும் செறிவாகவும் விளக்கியுள்ளார்.

Voice of Valluvar - Thirukkural (the Tamil Veda) என்ற நூலில் ஆங்காங்கே திருக்குறள் வெளிப்படுத்தும் பல்வேறு கோட்பாடுகளை மிகத் தெளிவான பொருள்சார் மற்றும் வாழ்வியல் நெறிசார் வரையறைக்கு உட்படுத்தி விளக்கங்கள் பலவற்றைக் குறிப்பிட்டுள்ளார், ஜோதிர்லதா (2015).

பொருளாதாரம் மற்றும் மேலாண்மைக் கோட்பாடுகளுக்கும் நன்னெறி அமைப்பு முறைக்கும் மேலே குறிப்பிட்ட ஆய்வுகள் குறிப்பிடத்தக்க பங்கினைக் கொடுத்துள்ளது தெளிவாகிறது.

இவற்றையெல்லாம் உற்றுநோக்கிய நிலையில் இவ்வாய்வில் பொருள் நிலைப் பண்பாடுசார் கோட்பாடுகள் முதன்மைப்படுத்தப்பட்டு அரசியல், அங்கவியல், ஒழிபியல் பகுதிகளில் இடம்பெற்றுள்ள குறட்பாக்கள் பல்வேறு உட்பிரிவுகளின் கீழ் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

ஆய்வு நெறிமுறைகள்

இவ்வாய்வு இரு சிறப்பு நோக்கங்களை எட்டுவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒன்று, நாடு சிறக்க, வீடு (மக்கள்) சிறக்க என்னென்ன வேண்டும், அவை எப்படியெல்லாம் அமைய வேண்டும் என்பது. மற்றொன்று இதற்குத் தேவையான பொருள் நிலைப் பண்பாட்டுக் கோட்பாடுகளை இனங்கண்டு ஏற்ற வழிமுறைகளை விளக்குதல். இவ்விரண்டு நோக்கங்களையும் அடைவதற்கு; அதற்கான ஆய்வை மேற்கொள்வதற்குச் சில தகவல்கள், கருத்துகள், உற்றுநோக்கல் வழியாகப் பெற்ற குறிப்புகள் போன்றவை தேவைப்படுகின்றன *(Elanchezhian, et al., 2014).* இவற்றையெல்லாம் மையப்படுத்தி நன்கு வரையறை செய்யப்பட்ட ஆய்வுநெறி முறைகளைப் பயன்படுத்தி இங்கே பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

I.ஆய்வு நெறிமுறை - அணுகுமுறை

இந்த ஆய்வு சமுதாய வளர்ச்சியும் அதற்கான திட்டமிடல் கோட்பாடுகளும் பொருளாதார வளர்ச்சியும் அதற்கான திட்டமிடலும் நாடும், சமுதாயமும் வாழ – வளர : அரசின் செயல்பாடுகள் என்னும் மூன்று அணுகுமுறைகளை ஏற்றுக்கொண்டு ஆராய்கிறது,

தேவைப்படும் தகவல்கள்

உற்றுநோக்கலின் வழியாகப் பெற்ற கருத்துகளும் செய்திகளும், தகவல்களும் கீழ்வருமாறு வகுக்கப்பட்டுள்ளன.

I. நாடு, அரசு, அமைச்சு குறித்த கருத்துகள்

II. நிருவாகம், மக்களது தேவைகள், இதற்கான பணிகளும் பின்பற்றப்பட வேண்டிய முறைகளும்

III. படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் குறித்த கோட்பாடுகள்

IV. இயற்றல், ஈட்டல், காத்தல், காத்த வகுத்தல் முறைகள்

V. பொருள் செயல் வகை, நட்பு, அரண், படைமாட்சி குறித்த செய்திகள்

VI. போன்ற பல தேவையாகின்றன.

மேலாண்மைக்கான கருவும் திருவும்

பொருளதிகாரத்தின் முதற்குறளே மேலாண்மைக்கான பொருள்சார் கோட்பாட்டின் கருவாகவும் திருவாகவும் அமைந்துள்ளது எண்ணற்பாலது *(Muniappan, 2001 Naganathan, 2016).*

> “படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும்
>
> உடையான் அரசருள் ஏறு”

ஒரு நாட்டு மேலாண்மையின் உச்சம் அரசன். அப்படிப்பட்ட அரசன் ஏறாகக் கருதப்பட ஆறு துறைகளில் செல்வந்தனாக விளங்க வேண்டும். இவ்வுடைமைகள் இன்றைய வல்லரசு நாடுகளில் கூடக் காணப்படவில்லை என்பது கண்கூடு. ஏனெனில்,

- வல்லரசாகக் கருதப்படும் நாடுகளில் கூடத் தேவையான அரணில்லை.
- வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் 15% - 35% விழுக்காட்டு மக்கள் தொகையினைக் கொண்டு அல்லலுறும் நாடுகள் - சமுதாயப்பிரிவினர்.
- வலுவான – பகையில்லாத – நட்பு நாடுகள் பெறாத நாடுகள்
- வலுவில்லா - ஆற்றல் குறைந்த அரசு / அமைச்சினைப் பெற்று விளங்கும் நாடுகள்

என அமைப்பிலும் உடைமையிலும் தன்னிறைவற்ற நாடுகள் காணப்படுகின்றனவே! மேலாண்மை என்னவாயிற்று? நாட்டு வளர்ச்சி என்னவாயிற்று? என்னும் கேள்விகளுக்குப் பதிலைத் திருக்குறளில் தேடலாம் *(Varatharajan, 1972)*. உயர் சிந்தனை தேவையாகும்.

ஒரு நாட்டில் அரசின் செயற்பாடு

அரசுக்கு நான்கு பெரும் பணிகள் உள்ளன: இயற்றல், ஈட்டல், காத்தல், காத்த வகுத்தல். இவை ஒன்றோடொன்று ஒருங்கிணைந்து இயங்குபவை; ஒன்றில்லாமல் மற்றொன்றில்லை.

இயற்றல், ஈட்டல் ஓரளவுக்கு முறைப்படுத்தப்பட்ட நிலையிலும் கூட ‘காத்தலும் காத்த வகுத்தலும்’ வறுமைக்கும், பொருளாதாரப் பின்னடைவு – வீழ்ச்சி போன்றவற்றிற்கு வழிவகுப்பதாகவும் உள்ளதைக் காண முடிகிறது. பொதுவுடைமைக் கொள்கை கூட வழிவகுக்காதது ஏன்? என்ற வினாவிற்குச் சரியான விடை இன்று வரை கிடைக்கவில்லை *(Gerber, & Nacionis, 2011).* இந்நிலையில் இந்நான்கு செயற்பாடுகளிலும் பின்பற்றப்பட்டு வரும் மேலாண்மையின் நிலை என்ன? என்ற கேள்வி எழுகிறதல்லவா! *(Krishnakumar, 2014).*

முறை செய்து காத்தல் – குடி ஓம்பல் – தூங்காமை

மேலாண்மையின் உத்திகளாகக் கீழ்வருவனவற்றைத் திருக்குறள் முன்வைக்கிறது.

I. தளர்ந்த குடிமக்களைக் காத்தல் *(Protecting the downtrodden communities)*

II. தூங்காமைப் பண்பு *(Not practising delaying techniques or tactics)*

III. முறைசெய்து காத்தல் *(Following the laws, Legal Methods, Social norms in protecting the needs – safeguard measures needed for the society)*

IV. குடிமக்களது குறைகளுக்குச் செவிமடுத்துக் கேட்டுப் பணியாற்றும் பண்பும் செயற்பாடும் அமைதல்.

V. அரசமைப்பில் இடம்பெறுவோரை எதிரிகளாக எண்ணி இன்னாத கூறாமை.

VI. இவையெல்லாம் இன்று எப்படி அமைந்து வருகின்றன? குறிப்பாக, தளர்ந்த மூத்த குடிமக்கள் படும் அல்லல் நீடிக்கும் நிலை ஒருபுறம், காலந்தாழ்த்திய செயற்பாடு - நீதி - நெறிமுறை பிறழ்ந்த செயற்பாடு மற்றும் எதிரிகளுக்கும் ஒவ்வாத இன்னாத சொற் பயன்பாட்டின் பயன்பாடு போன்றவை மற்றொரு புறம் குடியரசுக் கொள்கையினையே அதிர வைக்கிறதே - மேலாண்மை எங்கே மறைந்து விட்டது? குடியரசுகளின் தலைமையும் மேலாண்மையும் ஆழ்ந்து எண்ணிச் செயல்பட வேண்டிய காலச்சூழலைக் காண்கிறோம்.

உறுபசி - ஓவாப்பிணி - செறுபகை

ஒரு நாட்டின் மேலாண்மையை மதிப்பீடு செய்ய இம்மூன்றும் ஏற்ற அளவுகோல்களே! இவற்றைப் போக்குவதற்கு அரச மேலாண்மையே (Political Management) பெரிதும் வழிவகுக்கும். உறு, ஒவா, செறு என்ற அடைகள் extreme too much, unbearable போன்ற பொருளைத் தருவன. அது மட்டுமின்றி, உரிய நேரத்தில், சரியான முறையில், காலந்தாழ்த்தாது செயற்பாடுகள் அமைய நாட்டின் மேலாண்மை உதவ வேண்டும் - செயற்பட வேண்டும் என்பதையும் இது எடுத்துக் காட்டுகிறது (கல்பனா சேக்கிழார், 2009). இதனை முன்வைத்தே இக்குறள் அமைந்துள்ளது.

வாய்ந்த மலை – வருபுனல் – வல்லரண்

‘காடு மலை என்ற போதும் நம் நாடு’ என்று ஒரு பாடலில் குறிப்பிடுகிறார் கவிஞர் கண்ணதாசன். மலை வளம் – நீர் வளம் – நாட்டின் பாதுகாப்பிற்குச் சிறப்பிடம் வழங்கியுள்ளார் திருவள்ளுவர்.

இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு. (குறள் 737)

இத்தகைய வளங்களையும் அரணையும் பாதுகாப்பதும் பெற்று விளங்குவதும் சிறப்பிற்கு உரியன அல்லவா! இப்பணிகளுக்கான மேலாண்மை எந்த அளவிற்குத் தேவையானது என்பதை நீர்வளம் சில பகுதிகளில் குறைந்துள்ள இன்று நாம் கவலையோடு உணர்கிறோம். இதனடிப்படையில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள முனைகிறோம். அதே போன்று எல்லைப் பாதுகாப்புப் பணிகளின் (Border Security) இன்றியமையாத தேவையையும் உணர்கிறோம். இவற்றைச் செம்மைப்படுத்த தேவையான மேலாண்மைப் பணிகளை மட்டுமல்லாது, அனைத்துப் படிம நிலைகளிலும் (ஒருங்கிணைந்த நிலையில்) செய்ய வேண்டிய பாதுகாப்புப் பணிகளை

வேகமாக முடுக்கி விடுகிறோம். இவையெல்லாம் நாட்டின் பாதுகாப்புக்கான உடனடித் தேவைகள் - அரும்பணிகள் - காலத்தினாற் மேற்கொள்ள வேண்டிய காப்புப் பணிகள் என்பதில் ஐயமில்லை.

வேந்து அமைவில்லாத நாடு

ஒன்பது குறட்பாக்களில் நாடு – என்ற கோட்பாட்டினை விளக்கிய வள்ளுவப் பெருந்தகை அவ்வதிகாரத்தின் பத்தாவது குறளில் குறிப்பிட்டுள்ளது உற்று எண்ணத்தக்கது.

ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு. (குறள் 740)

நல்ல அரசன் அமையாத நாடு எவ்வாறு பயனற்றுப் போகும் என்பதை இக்குறள் வழி எடுத்துக்காட்டியுள்ளார். இத்தகைய சூழ்நிலை ஏற்படுவதற்கும் மேலாண்மையில் ஏற்படும் குறையே காரணமாகிறது. இதுவும் காப்பாளர்களின் உயர்சிந்தனைக்குரியது!

செங்கோன்மை – கொடுங்கோன்மை

குறள் செங்கோன்மை – கொடுங்கோன்மை என்பனவற்றைச் சிறப்பாக எடுத்துக்காட்டியுள்ளது.

வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல் நோக்கி வாழும் குடி. (குறள் 542)

எப்படி நாட்டைக் காக்கும் அரசன் முறைப்படி காக்காவிட்டால், அந்நாட்டில் வளர்க்கப்படும் பசுக்கள் பால் தரும் பயன் கூடக் குன்றிவிடும் என்பார். அப்படியெனில், மக்கள் பாதிப்புக்கு உள்ளாவதோடு மட்டுமன்றிப் பால் தரும் பசு கூடப் பயனற்றுப் போகும் என்பதை உணர முடிகிறது.

குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு. (குறள் 544)

எது செங்கோன்மை என்பதை விளக்கும் நிலையில், மன்னவன் மக்களை வருத்தாமல் காப்பாற்றுவதோடு, அவர்களது குற்றங்களைத் தக்க தண்டனையால் ஒழித்தல் வேண்டும் – அது மன்னனது தொழில்; பழி அன்று என்பார் வள்ளுவர். இன்னும் ஒரு படி மேலே போய், கொடியவர்

சிலரைக் கொலைத் தண்டனையால் அரசன் ஒறுத்தல் என்பது விளையும் பயிரைக் காப்பாற்றுவதற்காகக் களையை எடுப்பதற்கு நிகரான செயலே என்பார்

குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில். (குறள் 549)

கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர். (குறள் 550)

இவையும் மன்னனின் மேலாண்மைச் செயல்களே – ஆணைகளே! அதே போன்று கொடுங்கோன்மை அதிகாரத்தில் இடம்பெற்றுள்ள ஒரு குறளில் ‘அரசன் முறை தவறித் தன் நாட்டை ஆட்சி செய்வானானால், அந்த நாட்டில் பருவ மழை தவறி, மேகம் மழை பெய்யாமல் போகும் என்று சாடியுள்ளது குறிப்பிடத்தக்கது.

கூழுங் குடியும் ஒருங்கிழக்கும் கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு. (குறள் 554)

இவையும் மேலாண்மைக்கு உட்பட்டவையே.

பெரியோர் துணைக்கோடல்

கடிந்து தக்க அறிவுரை வழங்கும் பெரியாரின், ஆன்றோரின், சான்றோரின் துணைக்கொண்டு நடப்பவரைக் கெடுக்கும் ஆற்றல் யாருக்கு உண்டு? என்று வினவும் வள்ளுவர், இன்னொன்றையும் குறிப்பிடத் தவறவில்லை.

“இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்

கெடுப்பார் இலானுங் கெடும்” (குறள், 448)

இன்றைய மேலாண்மையில் *(top) advisory committee* போன்று ஆட்சிக்குழு, ஆலோசனைக்குழு, செயற்குழு, மேல்மட்ட நிருவாகக்குழு போன்றவற்றை அமைத்துச் செயல்படுத்தப்படுவதைக் காண்கிறோம். துறைசார் ஆற்றல் என்பது எல்லோருக்கும் அமைவதில்லை. அதனால் தேவைக்கேற்ப துறைசார் வல்லுநர்கள், பயிற்சியாளர்கள், இயக்குநர்கள் ஆகியோரது பங்கும் பணியும் தேவை என்பதும் சூழலுக்கேற்றவாறு

பயன்படுத்தப்பட வேண்டியது என்பதும் வலியுறுத்தப்படுகிறது. இது போன்ற பங்கும் பணியும் மேலாண்மை சார்ந்ததே *(Suddhananda Bharathi, 1960).*

பொருள் வளம் – பொருள் இயற்றல் மேலாண்மை

நாடும் வீடும் வாழ; வளம் பெற பொருள் வளமும் பொருள் இயற்றலும், ஈட்டலலும் என்பனவற்றோடு இவற்றின் பங்கு மிகவும் தேவையானது. பொருள் சார் பண்பாட்டு வளர்ச்சிக்கும் இது மிகவும் அவசியமாகிறது. எனவேதான் பொருள் பண்பாட்டிற்குச் சிறப்பிடம் கொடுத்து, 700 குறட்பாக்களை யாத்துள்ளார் திருவள்ளுவர் என்பது புலனாகிறது.

நாடு எனும் சொல்லுக்கு விளக்கும் தரும் நிலையில் 'நாடு என்ப நாடா வளத்தன' என்பார். இறைமாட்சி எனும் அதிகாரத்தில் 'இயற்றலும் ஈட்டலும்' என்று குறிப்பிடும் வள்ளுவர்,

"செய்க பொருளை செறுநர் செருக்கறுக்கும்

எஃகு அதனின் கூரியது இல்" (குறள்-759)

என்பதன் வழி 'ஒருவன் பொருளை ஈட்ட வேண்டும். அவனுடைய பகைவரின் செருக்கைக் கெடுக்கவல்ல வாள் அதைவிடக் கூர்மையானது வேறு இல்லை' என்று வரையறை செய்கிறார்.

"பொருள்அல் லவரைப் பொருளாகச் செய்யும்

பொருள் அல்லது இல்லை பொருள்" (குறள் - 751)

எனும் குறளில் பொருளின் தனித்தன்மையை விவரித்து, அதனை நல்வழிகளில் ஈட்டுவதன் மூலம் அறமும் இன்பமும் பெற முடியும் என்று குறிப்பிடுகிறார்.

"உறுபொருளும் உலகு பொருளும்தன் ஒன்னார்த்

தெறுபொருளும் வேந்தன் பொருள்" (குறள்-756)

இயற்கையாக வந்து சேரும் பொருள் + சுங்கமாக வந்து சேரும் பொருள் + பகைவரை வென்று திறமையாகக் கொள்ளும் பொருள் இவையனைத்தும் அரசனது பொருள் (Government Treasury) என்று குறிப்பிட்டு நாட்டுப் பணிகளுக்காக வேந்தனைச் சேர வேண்டிய பொருள் என்பதைச் சுட்டிக்காட்டி, பொருளாதார மேலாண்மைப் பணிகளை வெளிப்படையாகக் குறிப்பிடுகிறார் வள்ளுவர். வேந்தன், அரசுப் பணிகளுக்காக – மக்கட் பணிகளுக்காகச் செலவிடும் பணம் பலவகைகளிலும் வந்து சேர்வது. இதனைப் பெற்று நாட்டுப் பணிகளுக்குச் செலவிட ஏற்ற மேலாண்மை தேவை. இதைத்தான் நாடுகள் ஆண்டுதோறும் மேற்கொள்கின்றன. மூன்று முதல் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திட்டப் பணிகளை மேற்கொள்கின்றன. குறுகிய கால நீண்ட கால

வளர்ச்சித் திட்டங்களையும் மேற்கொள்கின்றன. (Short Term and Long Term Projects and Plans). இப்படி மேற்கொள்ளப்படும் திட்டங்களே ஒரு நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கும் உரமூட்டுகின்றன.

படைமாட்சி

ஓர் அரசனுடைய வெற்றிப்படை ஒரு நாட்டின் செல்வங்கள் எல்லாவற்றிலும் தலைசிறந்த செல்வமாகும் எனக் குறிப்பிட்டுள்ளார் வள்ளுவர். படைமாட்சி எனும் அதிகாரம் படையின் தேவை, தலைமை, வலிமை, அஞ்சாமை, ஆற்றல் போன்றவற்றை உள்ளடக்கியது. 'தம்பியுடையான் படைக்கு அஞ்சான்' என்பது முதுமொழி – கவிமொழி. படைமாட்சிக்குப் பொருத்தமான அணுகுமுறையும் தேவை; மேலாண்மையும் தேவை. அவசரமும் அவசியமும் கலந்த மேலாண்மையே மிகுந்த பலன் தரும் என்பதால் போற்றிப் பேணப்பட வேண்டிய ஒன்று – இதனால்தான் இறைமாட்சிக்கு நிகராகப் படைமாட்சியை விளக்கியுள்ளார் என்பது தெளிவாகிறது.

முடிவுரை

திருக்குறள் ஓர் அறநூல் என்றாலும் பொருளாதிகாரம் மையப்படுத்தியுள்ள கோட்பாடுகள் பொருள்நிலைப் பண்பாடு சார்ந்தவையாகவே அமைந்துள்ளன. நாம் அன்றாடம் எதிர்கொள்ளும் பொருள்சார் வாழ்க்கை தொடங்கி அரசு, ஆட்சி, மேலாண்மை, கல்வி, நட்பு, அரண், படை, குடி, கூழ், அறிவு, ஆற்றல், ஆள்வினை உடைமை, பகை எனப் பல்வேறு கூறுகளை உள்ளடக்கியது. பாரெங்கும் நாம் அன்றாடம் காண்பது; உற்று நோக்கி உயர் சிந்தனைக்கு உள்ளாக்குவது. எனவே, பொருளாதிகாரம் நாட்டு நடப்பிற்கும் அன்றாட வாழ்வியலுக்கும் வழி காண்பது. அதனால்தான் இதன் வாயிலாக வெளிப்படும் கோட்பாடுகள் மனித சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் வழிவகுக்கும் என்பதால் அவற்றைப் போற்றிப் பின்பற்றி வாழ முனைகிறோம். இது போன்ற கருத்துக்கள் இன்னும் நன்முறையில் பரவலாக்கம் பெற வேண்டும். அதற்கு இது போன்ற ஆய்வுகள் துணை நிற்கும்.

REFERENCES

Alka Jain. (2012). 'Rediscovering six factor entrepreneurial Decision Making Mode l in Thirukkural', International Journal of Science and Research (IJSR) pp.2498 – 2504.

Chendrayan, C. (2010). The First Laws in Economics and Indian Economic Thought – Thirukkural.

Elanchezhian, K. et al (2014). *Concept Relation based Search*. Chennai: Kuralagam

Gerber, L.M. & Nacionis, J. (2011). Sociology, Pearson Canada Inc.: Toronto. Gros, F. (1992). Book of Love.

Irai Anbu, V. (2012). *Ancient yet Modern Management Concepts in Thirukkural.* Chennai: Allied Publishers

Jyothirlatha, G. (2015). Voice of Valluvar – Thirukkural (The Tamil Veda), Cyberwit.net.

Kalpana sekkizhar. (2009). ThirukkuRaL Parithiyaar urai. Chennai: Thamilman Pathippakam.

Karunakaran, K. & Jeya, V. (1993) *Kural Mozhiyum NeRiyum*. Kurinjippadi: Maniyam Pathippagam.

Karunakaran, K. (2014). “Thirukkural-Oru Ko:ṭpa:ṭṭuc Caṅkamam’ (in Tamil), Journal of Tamil Research.

Krishnakumar (2014). *‘Management concepts from Thirukkural*’ (Retrieved sep.2016).

Muniappan, B. (2001). ‘Thirukkural and Business Ethics’ Intl. Journal of Culture and Business Mangagement 41, 453 – 465.

Naganathan, S. (2015). ‘Thiruvalluvar and the Art of Management’ (retrieved oct.18, 2016.)

Suddhananda Bharathi, S. (1960). *Saint Thiruvalluvar (with English Couplets) – (Translation)* Susse: AssA GrandRue.

Soundram, S. (2012). Love in Tamil Literature: Some Words about Thirukkural. Pondicherry: SITA

Varatharajan, M. (1972). *Thirukkural – Thelivurai*, Chennai: Kazhagam